*1973 நவம்பர் 23]*

## *Co-operative Super Markets*

* 238 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased state—

(*a*) the number of Co-operative Super Markets in this State at present; and

(*b*) the number proposed to be started during 1973–74?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) பதின்மூன்று.

(இ) ஏழு.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, கூட்டுறவு சிறப்பங்காடிகள் 13 இருப்பதாகச் சொன்னார்கள். அவைகளில் லாபகரமாக எத்தனை சிறப்பங்காடிகள் நடைபெறுகின்றன, நட்டத்தில் எத்தனை சிறப்பங்காடிகள் நடைபெறுகின்றன என்ற விபரத்தை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா? நட்டமாக செயல்படுவதற்குக் காரணம் இந்த அங்காடிகள் விற்பனை வரியில் தனியார் போல் ஏய்ப்பு செய்ய முடியாது. அதனால் தனியாரோடு போட்டி போட முடியாது. இந்த விற்பனை வரியை ரத்து செய்தால் லாபத்தில் செயல்படலாம். ஆகவே விற்பனை வரி விலக்களிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, 13 சிறப்பங்காடிகளில், காமதேனு, காவேரி, கற்பகம், திருச்சி, சேலம், மதுரை, நெல்லை இவைகளில் 1972-73-ம் ஆண்டில் நட்டம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். தஞ்சை-காவேரி, சரவணா-கடலூர், சிந்தாமணி-கோவை, கருணாநிதி-ஊட்டி, பகவதி-நாகர் கோவில் இவைகள் லாபத்தில் இயங்கிக்கொண்டிருப்பதாக கணக்கிட்டிருக்கிறார்கள். நட்டமாக இயங்கிக்கொண்டிருந்தவைகள் கூட 1973-74-ம் ஆண்டில் லாபகரமாக இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு கே. எ. வகாப் :** தலைவரவர்களே, கோவையிலே இருக்கிற சிந்தாமணி சிறப்பங்காடி இந்த ஆண்டு ஆசியாவிலேயே மிக அதிகமாக விற்பனை செய்த கூட்டுறவு அங்காடி என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்த அங்காடியில் எப்படி விற்பனையைப் பெருக்கி, லாப

மடைகிறுர்கள் என்பதை அறிந்து அந்த நடைமுறைகளை மற்ற சிறப்பங்காடிகளிலும் பின்பற்றச் செய்வதற்கு, அவர்களுக்கு இந்த அங்காடியில் பயிற்சியளிக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** சென்ற திங்களில் இதற்காகவே எல்லா சிறப்பங்காடிகளிலும் பணியாற்றுகின்ற அதிகாரிகளையும் அழைத்து, தனிப்பட்ட வியாபாரிகளையும் அழைத்துப் பேசியிருக்கிறேம். பொதுவாக கொள்முதல் செய்வதில் கோவை சிறப்பங்காடி சிறப்பாகச் செயல்பட்டதினுல் நல்ல முறையில் இயங்கி, லாபமடைய முடிந்ததாகத் தெரிகிறது. கொள்முதல் செய்வதற்கு ஒரு குழு அமைப்பதற்கு முயற்சி செய்யப்படுகிறது. விரைவில் அது முடிவுபெறும் என்று கருதுகிறேன். கோவை கூட்டுறவு சிறப்பங்காடியைப் பின்பற்றி, இப்போது திருச்சி சிறப்பங்காடி நடைபெற்று லாபகரமாகச் செயல்படுகிறது என்று சொல்லப்படுகிறது.

### *Gudiyatham Town Co-operative Society*

* 239 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether a petition, dated 17th January 197 and signed by the members of the Gudiyatham Town Co-operative Society, Gudiyatham regarding the unreasonable closure of the society has been received by him; and

(*b*) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம், 1961, பிரிவு 65-ன் கீழ் பண்டகசாலையின் நடவடிக்கைகளிற்கான ஓர் விசாரணை நடந்து வருகிறது.

**திரு. எ. க. துரைசாமி :** தலைவரவர்களே, இயக்குநர்களில் சிலர் அந்தச் சங்கத்தில் 2,400 ரூபாய் கையாடல் செய்ததை ஒப்புக்கொண்டு, அந்தப் பணத்தைத் திருப்பிக் கட்டிவிடுவதாகச் சொல்லி அரசுக்கு விண்ணப்பம் செய்திருக்கிறுர்களா ? அப்படியானுல் அவர்கள் மீதுள்ள வழக்குகளை வாபஸ் பெற அரசு முன்வந்திருக்கிறதா ? அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?